**கவனிக்க.**-2024.01.12 ஆந் திகதிய 2367 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) (தமிழ் மொழி மூலம்) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2368 - 2024 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2024.01.19

*2368 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 6 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 8 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


5 - B 082533- 353 (2024/01)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை
## மாவட்ட நீதிமன்றம், பலாங்கொடை

வழக்கு இலக்கம்: 5047/ MB
தடுப்பானை இல.: 07/ 2020
வழக்கு பெறுமதி: ரூபா 5,984, 532.92
தன்மை: ஈடு
செயல்முறை: முறையானது

கொழும்பு 03, காலி வீதி, இல. 450 எனும் நிரந்தர முகவரியைக் கொண்ட மற்றும் இல. 84, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொடை எனும் முகவரியில் "பலாங்கொடை கிளை" என்று அறியப்படும் கிளை அலுவலகத்தைக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ ( Pan Asia Banking Corporation PLC)

வழக்காளி

எதிராக-

பமுனு ஆராச்சிலாகே சத்துர சுதர்ஷன ஞானரட்ன,
"தர்ஷன" எட்மோ எஸ்டேட்,
ரத்மலவின்ன,
பலாங்கொடை.

எதிராளி

2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வழக்காளிக்கு மேற்குறிப்பிடப்பட்ட எதிராளியினால் செலுத்தப்பட வேண்டிய கடன் வசதிகளின் மீது ஏழு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பது ரூபா பதினாறு சதம் (ரூபா 7,40,879.16) பணத்தொகை மற்றும் அப்பணத்தொகை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை, 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 7,24,439.15 பணத்தொகைக்கு 20% வருடாந்த வட்டியும், எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூபா 8,58,058.32) பணத்தொகை மற்றும் அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 8,02,119.38 பணத்தொகைக்கு 20% வருடாந்த வட்டியும், ஒரு மில்லியன் நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று பத்து ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 1,497,610.87) பணத்தொகை மற்றும் முழுப்பணத்தொகையும் முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 1,412,035.56 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியும் மற்றும் இரண்டு மில்லியன் எட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா 2,887,984.57) பணத்தொகை மற்றும் அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 2,8,87,984.57 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியுடன் வழக்காளிக்கு செலுத்தப்பட வேண்டியதுடன்,

மேலும் மேற்குறிப்பிடப்பட்ட வழக்காளிக்கு எதிராளியிடமிருந்து, ஏழு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பது ரூபா பதினாறு சதம் (ரூபா 7,40,879.16) பணத்தொகை மற்றும் அப்பணத்தொகை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 7,24,439.15 பணத்தொகைக்கு 20% வருடாந்த வட்டியும், எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூபா 8,58,058.32) பணத்தொகை மற்றும் அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 8,02, 119.38 பணத்தொகைக்கு 20% வருடாந்த வட்டியும், ரூபாய் ஒரு மில்லியன் நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று பத்து ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 1, 497,610.87) பணத்தொகை மற்றும் முழுப் பணத்தொகையும் முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.30 ஆந் திகதியிலிருந்து ரூபா 1,412,035.56 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியும் மற்றும் இரண்டு மில்லியன் எட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா. 2,887,984.57) மற்றும் அப்பணத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 2017.03.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 2,887,984.57 பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியுடன் அறவிடுவதற்காக இல. 7397, 2367 மற்றும் 2481 ஆகிய ஈட்டுமுறிகளின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள்.

2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கும் மற்றும் பி.ப.2.30 மணிக்கும் இடையில் என்னால் தடைசெய்யப்பட்ட அசையாச் சொத்துக்கள் பலாங்கொடை , ரத்மலவின்ன எனும் இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட 1 ஆம் அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கடவத்தைகோரளை, உடுவத்கம பத்துவ, இம்புல்பே பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவு, ரத்மலவின்ன கிராம அலுவலர் பிரிவு, ரத்மலவின்னயில் அமைந்துள்ள "தம்பிட்டிய மூக்கலான " எனும் தற்போது "எட்மோ எஸ்டேட்" என்று அறியப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் B. விமலதர்ம அவர்களினால் தயாரிக்கப்பட்டு 2009.10.22 ஆந் திகதியிடப்பட்ட 1251 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1050 ஆம் இலக்க வரைபடத்தில் காணி மற்றும் M.A. குணரத்ன மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்படும் காணி; கிழக்கு M.A. குணரத்ன மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்படும் காணி மற்றும் R.M. திலகரட்ன என்பவரினால் உரிமை கோரப்படும் காணி மற்றும் பாதை; தெற்கு: பாதை மற்றும் மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1050 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணி மற்றும் இக்காணியானது ஒரு றூட் பதினான்கு பேர்ச் (00ஏ.01றூ.14பே.) விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியதுள்ளதுடன், இக்காணியானது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் தொகுதி/இருமடி D 242/204 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இக்காணியானது பின்வரும் காணியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.*

*மேற்குறிப்பிடப்பட்ட ரத்மலவின்னயில் அமைந்துள்ள "தம்பிட்டிய மூக்கலான " எனும் தற்போது "எட்மோ எஸ்டேட் " என்று அறியப்படும் காணியின் ஒரு பகுதி, உரிமம் பெற்ற நில அளவையாளர் A ரட்ணம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1984.04.28 ஆந் திகதிய 1052 ஆம் இலக்க வரைபடத்தில் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1050 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணி ; கிழக்கு: M.A. குணரத்ன W.R. பின்ஹாமி மற்றும் M.A. ஜயவர்தன ஆகியோரினால் உரிமை கோரப்படும் காணி; தெற்கு: எஸ்டேட் பாதை; மற்றும் மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1050 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணி மற்றும் இக்காணியானது இரண்டு றூட் (00ஏ.02றூ.00பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன், இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் தொகுதி/இருமடி D 242/177 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**மேற்குறிப்பிடப்பட்ட காணியின் 2 ஆம் அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கடவத்த கோரளை, உடுவக்கம் பத்து இம்புல்பே பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவு, ரத்மலவின்ன கிராம அலுவலர் பிரிவு, ரத்மலவின்னயில் அமைந்துள்ள "தம்பிட்டிய மூக்கலான " எனும் தற்போது "எட்மோ எஸ்டேட்" என்று அறியப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் பந்துசேன விமலதர்ம என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.03.15 ஆந் திகதிய 1769 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்டு காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: பாதை மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 193 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணித்துண்டு 3; கிழக்கு: ஓடை; தெற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் பந்துசேன விமலதர்ம அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1724 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணி; மற்றும் மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் G.R.S. ஜயரட்ண அவர்களினால் தயாரிக்கப்பட்ட 257A ஆம் இலக்க வரைபடத்தில் உள்ளவாறான காணித்துண்டு 01, மற்றும் 1769 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய மூன்று றூட் மூன்று பேர்ச் (00ஏ.03றூ.03பே.) அல்லது 0.3111 ஹெக்டயார் விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளதுடன் பாதை ஒதுக்கீட்டினையும் கொண்டுள்ள காணியாகும்.*

*காணித்துண்டு 01 பின்வரும் காணிகளின் ஒன்றிணைக்கப்பட்ட உப பிரிவாகும்.*

*01. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கடவத்த கோரளை, உடுவக்கம் பத்து, இம்புல்பே பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவு, ரத்மலவின்ன கிராம அலுவலர் பிரிவு, ரத்மலவின்னையில் அமைந்துள்ள " தம்பிட்டிய மூக்கலான " எனும் தற்போது "எட்மோ எஸ்டேட்டின் ஒரு பகுதி" என்று அறியப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் S.S. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1998. 03.07 ஆந் திகதிய 493 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: பாதை மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் A. ரட்ணம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 193 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 3; கிழக்கு: மாலதொல; தெற்கு: காணித்துண்டு 2, பாதை; மற்றும் மேற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் G.R.S. ஜயரட்ண அவர்களினால் தயாரிக்கப்பட்ட 257A ஆம் இலக்க வரைபடத்தின்*

*காணித்துண்டு 01, மற்றும் 493 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச் (00ஏ.01றூ.34பே.) அல்லது 0.1872 ஹெக்டயார் விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இக்காணியானது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் தொகுதி/இருமடி D 308/22 இன் கீழ் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*02. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கடவத்த கோரளை, உடுவக்கம் பத்து, இம்புல்பே பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவு, ரத்மலவின்ன கிராம அலுவலர் பிரிவு, ரத்மலவின்னையில் அமைந்துள்ள " தம்பிட்டிய மூக்கலான " எனும் தற்போது "எட்மோ எஸ்டேட்டின் ஒரு பகுதி" என்று அறியப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் S.S. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1998.03.07 ஆந் திகதிய 493 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: காணித்துண்டு 1; கிழக்கு: வாய்க்கால்; தெற்கு: பாதை மற்றும் மேற்கு : பாதை; மற்றும் 493 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய ஒரு றூட் முப்பத்து நான்கு பேர்ச் (00ஏ.01றூ.34பே.) அல்லது 0.1872 ஹெக்டயார் விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இக்காணியானது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் தொகுதி/இருமடி D 294/ 66 இன் கீழ் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

A.D. சுரவீர,
பதிவாளர்/பிரதி பிஸ்கால்,
*மாவட்ட நீதிமன்றம்,*
*பலாங்கொடை.*

*2024 , சனவரி 02 .*

*01-220*

---

## *நானாவித அறிவித்தல்கள்*

### *(கம்பனிகளை ஒடுக்குதல் தொடர்பான அறிவித்தல் )*
### *மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் ( கொழும்பில் நடைபெறுகின்றது)*
### *குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்*

வழக்கு இலக்கம்: CHC/ 102/2023/CO
தன்மை: கலைப்பு (ஒடுக்குதல்) செய்தல்

வாத்துவ, பொஹதாரமுல்ல, வெரலபார எனும் இடத்தில் தனது பதிவுபெற்ற நிறுவனத்தைக் கொண்டுள்ள EM ஹொட்டல்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் எனும் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பானது.

*மனுதாரர்*

*எதிர்*

லிமிடோன் குளோபல் லிமிடட், OMC சேம்பர்ஸ், விக்ஹம்ஸ் கே 1 ரோட்,
டவுன், ரொல்டோலா,
பிரிட்டிஷ் வர்ஜின் ஐலான்ஸ்.

*பிரதிவாதி*

மேற்படி நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2023, திசெம்பர் மாதம் 08 ஆந் திகி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த

மனு தொடர்பான விசாரணை 2024, மாச்சு மாதம் 25 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந் நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கே.எச்.பீ.தனுக்ஷிகா பிரியதர்ஷனி,
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி,
இல.166/1, புதுக்கடை வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன், நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2024, மாச்சு மாதம் 24ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

01- 172

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.